**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : க. முனுசாமி, எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.பி.ஏ., பி.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்:1227/மாஒ2/NILP/SS/2022 நாள்:10.10.2022**

பொருள்: வேலூர் மாவட்டம் – பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி – "புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022–27" – செயல்படுத்துதல் சார்ந்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், அரசு/அரசு நிதியுதவு பெறும் நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் விளக்கக் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் – சார்பாக.

பார்வை: சென்னை–6, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.353/ஆ2/2022, நாள் : 13.09.2022

-------

மேற்காண் பொருளின்படி, வேலூர் மாவட்டம் – பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி – "புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022–27" செயல்படுத்துதல் சார்ந்த வழிகாட்டுதல் நெறிமுறை விளக்கக் கூட்டம் நாளை 11.10.2022 அன்று பிற்பகல் 01.30 மணியளவில் VIT சென்னாரெட்டி கூட்டரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் இயக்குநர் அவர்களும், இணை இயக்குநர் அவர்களும் கலந்துக் கொண்டு வழிகாட்டு நெறிமுறைகளை விளக்கவும், விழா பேருரை ஆற்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள்.

எனவே, மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/தொடக்கக்கல்வி/தனியார் பள்ளிகள்), வட்டாரக் கல்வி அலுவலர்கள், அரசு/அரசு நிதியுதவி பெறும் மேல்நிலை / உயர்நிலை / நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

10/10/22

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர்–6.

10/10/2022

**பெறுநர் :**

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம்
4. மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்), வேலூர் மாவட்டம்
5. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
6. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.
7. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் (சார்ந்த மேற்பார்வையாளர்கள் மூலமாக).

நகல்:

1. பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர், சென்னை–6 அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.
2. முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.